# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032

தொலைபேசி 044–22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)**

**ஆணை எண்.167/பேரூ/2022**

**நாள் : 02.11.2022**

திரு. S. செல்வகுமார்,
தென்காசி மாவட்டம். ... முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
ஆயக்குடி பேரூராட்சி. ... எதிர்மனுதாரர்

தென்காசி, வடக்கு ஒப்பனை தெரு, எண்.96ல் வசிக்கும் சந்திரா ஏஜென்ஸிஸ் என்கின்ற நிறுவனத்தின் உரிமையாளர் திரு. S. செல்வகுமார் என்பவரின் 30.09.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 03.10.2022-ல் பெறப்பட்டு 167/பேரூ/2022 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

தென்காசி, வடக்கு ஒப்பனை தெரு, எண்.96ல் வசிக்கும் சந்திரா ஏஜென்ஸிஸ் என்கின்ற நிறுவனத்தின் உரிமையாளர் திரு. S. செல்வகுமார் என்பவர் தனது முறையீட்டு மனுவில், கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:

"தென்காசி மாவட்டம் ஆயக்குடி பேரூராட்சி செயல் அலுவலர் திரு. J. மாணிக்கராஜ் அவர்களால் மாதாமாதம் ரூ.8950/–ல் இருந்து ரூ.9950/–க்குள் பில் போட்டு பொருட்களே வாங்காமல் பில்கள் மட்டும் வாங்கப்பட்டு பில் கொடுத்துள்ள நிறுவனங்களுக்கு பேரூராட்சியில் இருந்து நிறுவனத்தின் பெயரில் செக் கொடுக்கப்பட்டு நிறுவனத்தாரால் செக் தொகையில் 10 சதவீதம் முதல் 20 சதவீதம் வரைக்கும் கமிஷன் எடுத்துக்கொண்டு மீதி தொகை பேரூராட்சி நிர்வாகத்திடம் கொடுக்கப்படுகின்றன.

2022–2023ம் ஆண்டுக்கான பொருட்கள் சப்ளைக்கு வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி என்ற பெயரில் தகுதியே இல்லாத பல நிறுவனங்களிடம் விலைப்புள்ளி பெறப்பட்டு பொருட்கள் எதுவும் வாங்காமல் பில்கள் மட்டும் வாங்கப்படுகின்றன.

பேரூராட்சி இயக்குநர் சுற்றறிக்கை எண் 1/2008/இ2/நாள் 25.01.2008 மற்றும் 3416/2013/ஊ1/நாள் 28.06.2013 சுற்றறிக்கையின் நகல்களின்படியும் ஒப்பந்தப்புள்ளி நடத்தாமல் தங்களுக்கு வேண்டிய நிறுவனங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார்கள்.

ஆயக்குடி பேரூராட்சியில் பிளிச்சிங் பவுடர், பினாயில், சுண்ணாம்புதூள், கொசுமருந்துகள், பொதுசுகாதார தளவாட பொருட்கள் போன்ற இனங்களுக்கும் புல் வெட்டுதல், குழிதோண்டுதல், ஜெராக்ஸ் எடுத்தல், ஜேசிபி இயந்திரம் வாடகைக்கு எடுத்தல், கணினி பராமரிப்பு, கணினி டோனர் ரீபிள் செய்தல், மின்மோட்டார் பழுது நீக்கம், குடிநீர் குழாய்களில் ஏற்படும் பழுதுகள் இனங்களுக்கு GST வரி கட்டும் நிறுவனங்களிடம் பில் வாங்காமல் பேரூராட்சி அலுவலக உதவியாளர் பேரூராட்சியில் பணி செய்யும் பணியாளர்களை வைத்து வெள்ளை பேப்பரிலும் ஜி.எஸ்.டி பதிவு இல்லாத, வரி கட்டாத ஏதோ நிறுவனத்தின் பெயரில் போலியாக பில் தயார் செய்து போலியான பெயரில் செக் கொடுத்து பேரூராட்சி நிர்வாகத்தினரே முறைகேடு செய்கின்றார்கள்.

ஆயக்குடி பேரூராட்சியில் 2019–2020, 2020–2021, 2021–2022ம் மார்க்கெட் விலையை விட மிக அதிக விலைக்கு சோலார் உயர் கோபுர விளக்குகள் ( 6 எண்ணம் பிட்டிங்ஸ் உள்ளது), தெரு விளக்கு எல்இடி விளக்குகள், நீம் ஆயில் (ECOCLEAN 50 PLUS) போன்ற இனங்களுக்கு பேப்பர் விளம்பரம், ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் இல்லாமல் ஒரு குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு பொதுநிதியில் இருந்து பல கோடிகளுக்கு வாங்கப்பட்டு மிக பெரிய அளவில் முறைகேடு நடைபெற்றுள்ளன.

பேரூராட்சிகளின் தரம் வாரியாக (பொதுசுகாதார பொருட்கள் வாயிலாக சுகாதார ஆய்வாளர் அல்லது சுகாதார பணி மேற்பார்வையாளர் மூலம்), (தெரு விளக்கு பொருட்கள் வாயிலாக மின் பணியாளர் மூலம்), (குடிநீர் குழாய் பொருட்கள் வாயிலாக பிட்டர் அல்லது பம்பு ஆப்பரேட்டர் மூலம்) செக் எழுதும் அலுவலக உதவியாளர் மூலம் மாதம் ரூபாய் 5 இலட்சம் முதல் 10 இலட்சம் வரைக்கும் பேரூராட்சி பொதுநிதியில் இருந்து பேரூராட்சி நிர்வாகம் மிகபெரிய அளவில் முறைகேடுகள் செய்து வருகின்றன. பணம் பிரிக்கப்படும் பங்குகள் பற்றிய விவரம், பேரூராட்சி இயக்குநர் அலுவலகம் சென்னை பேரூராட்சிகளின் மண்டல உதவி இயக்குநர் அலுவலகம், மாவட்ட உதவி இயக்குநர் உள்ளாட்சி நிதி தணிக்கை அலுவலகம், பேரூராட்சி செயல் அலுவலர், பேரூராட்சி அலுவலக உதவியாளர், பொருட்கள் இருப்பு பதிவேடுகள் பராமரிப்பு செய்யும் சம்மந்தப்பட்ட துறை பணியாளர் மற்றும் பேரூராட்சி மன்றம்.

2020–2021, 2021–2022, 2022–2023 ஆண்டு நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்ட நிறுவனங்களை நேரில் அழைத்தும், பைல்கள் மற்றும் பில்களை வாங்கியும் ஆராய்ந்து பொருட்களே வாங்காமல் பில் மட்டும் வாங்கும் பேரூராட்சி நிர்வாகம் மீது தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மேற்காணும் முறைகேட்டை முற்றிலும் ஒழிக்க தற்பொழுது பேரூராட்சியால் நடைபெறும் வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி முறையை ரத்து செய்து பேரூராட்சிக்கு தேவைக்கான பொருட்களுக்கு திட்ட மதிப்பீடு தயார் செய்து E-TOKEN DIGITAL SIGNER TENTER TWO COVER SYSTEM முறையிலும் ஜி.எஸ்.டி. பதிவு பெற்ற நிறுவனங்களிடம் விலைப்புள்ளி ஒப்பந்தப்புள்ளி வாங்கியும் பணிக்கான பில்தொகை நிறுவனத்தின் பெயரில் கோடிட்ட காசோலையாக வழங்க பேரூராட்சிக்கு உத்தரவிடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மேற்கண்ட முறையீடுகள்அனைத்தும் மாவட்ட உதவி இயக்குநர் உள்ளாட்சி நிதி தணிக்கை அலுவலகம், பேரூராட்சிகளின் மண்டல உதவி இயக்குநர் அலுவலகம் ஆதரவுடன் நடைபெறுகின்றது. தகவல் பெறும் உரிமைச்சட்டத்தின் கீழ் பேரூராட்சிகளில் தகவல் கோரினால் பேரூராட்சிசெயல் அலுவலர்கள் ஏதாவது ஒரு விதியை காரணம் தெரிவித்து பதில் தர இயலாது என்று ஒரு வரியில் தகவல் கேட்ட 30 நாட்கள் கழித்து ஒரு வரியில் பதில் தருகின்றார்கள்" என தெரிவித்துள்ளார்.

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்பக்கோரி ஆயக்குடி பேரூராட்சி செயல் அலுவலருக்கு இம்முறைமன்ற நடுவ 06.10.2022 நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டது.

**3) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் இம்முறைமன்ற நடுவ 06.10.2022 நாளிட்ட அழைப்பாணைகள் மூலம் 13.10.2022 அன்று தென்காசி முகாமில் நடைபெறும் நேரடி விசாரணைக்கு அழைக்கப்பட்டனர்.**

4) மனுதாரர் 13.10.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

"தென்காசி மாவட்டம் ஆயக்குடி தேர்வுநிலை பேரூராட்சியில் ஒப்பந்தப் புள்ளிகளை கோருவதிலும், பொருட்களை வாங்குவதிலும் பல்வேறு முறைகேடுகள் நடைபெற்று வருகின்றன. இயக்குநரின் சுற்றறிக்கையின்படி ஒப்பந்தப்புள்ளிகளைக் கோராமல், தங்களுக்கு வேண்டியவர்களுக்கே ஒப்பந்தங்களை வழங்கி வருகின்றனர். பொருட்களை வாங்காமலேயே பொருட்களை வாங்கியதாகக் கூறி, போலி பில்களை சமர்ப்பித்து பேரூராட்சி அலுவலர்களே தொகை பெற்றுக்கொள்கின்றனர்.

உயர் கோபுர மின்விளக்கு, எல் இ டி விளக்குகள், நீம் ஆயில் போன்றவற்றை வாங்கும்போது ஒப்பந்தப் புள்ளிகளுக்கு பத்திரிகை விளம்பரம் ஏதும் அளிக்காமல் ஒரு குறிப்பிட்ட நிறுவனத்திற்கு பொருட்கள் வாங்கியதில் பெரிய அளவில்லை முறைகேடு நடந்துள்ளது. எனவே, மேற்கண்ட முறைகளை பேரூராட்சி நடைபெறுவதை தடுத்திடவும், ஒப்பந்தப்புள்ளி கோருவதில் உள்ள முறைகேட்டை போக்க E Tender முறையை பேரூராட்சிகளில் கொண்டு வரவும் ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என்று தெரிவித்துள்ளார்.

மேலும் எனது 30.9.2022 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

**ஆயக்குடி தேர்வு நிலை பேரூராட்சி செயல் அலுவலர் 13.10.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார் :**

"தென்காசி மாவட்டம் ஆயக்குடி தேர்வுநிலை பேரூராட்சிக்கு 2020 முதல் 2023 வரையிலான 3 ஆண்டுகளுக்கு பொருட்களை சப்ளை செய்ய பேரூராட்சிகளின் இயக்குநரின் சுற்றிக்கையின்படி பத்திரிகையில் விளம்பரம் செய்யப்பட்டு பொருட்கள் வாங்கப்பட்டுள்ளன.

அதே போன்று பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத்துறை, தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தின் 31.12.2021 நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விலைவிகிதத்தின் அடிப்படையில் விலைப்புள்ளிகள் பெறப்பட்டு அந்நிறுவனத்திடமே தேவையான கிருமிநாசினிப் பொருட்கள் வாங்கி பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், 2019–லிருந்து 2022 ஆண்டுவரை உயர்கோபுர விளக்குகள் ஏதும் இப்பேரூராட்சியால் கொள்முதல் செய்யப்படவில்லை என்பதையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் 2020 முதல் 2022 வரையிலான 3 ஆண்டுகளுக்கு பொருட்களை சப்ளை செய்வதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோருவது தொடர்பான விளம்பரங்கள் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளன. 2020 ம் ஆண்டிற்கு 4.3.2020 அன்றும், 2021ம் ஆண்டிற்கு 8.2.2021 அன்றும், 2022ம் ஆண்டிற்கான விளம்பரம் 13.3.2022 அன்றும் பத்திரிகையில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளன என்கின்ற விவரத்தையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இம்முறை மன்றத்திற்கு என்னால் சமர்ப்பிக்கப்பட்ட எனது 13.10.2022 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

ஆய்க்குடி பேரூராட்சி செயல் அலுவலர் தனது 13.10.2022 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

“மனுதாரரால் வழங்கப்பட்டுள்ள மேல்முறையீட்டு மனுவில் 2022–2023 ஆம் ஆண்டுக்கான பொருட்கள் சப்ளைக்கு வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி என்ற பெயரில் தகுதியே இல்லாத பல நிறுவனங்களிடம் விலைப்புள்ளி பெறப்பட்ட பொருட்கள் எதுவும் வாங்காமல் பில்கள் மட்டும் வாங்கப்படுகின்றது எனவும் GST வரி கட்டும் நிறுவனங்களிடம் பில் வாங்காமல் பேரூராட்சி அலுவலக உதவியாளர் பேரூராட்சியில் பணி செய்யும் பணியாளர்களை வைத்து வெள்ளை பேப்பரிலும் ஜி.எஸ்.டி பதிவு இல்லாத வரிகட்டாத ஏதோ நிறுவனத்தின் பெயரில் பில் தயார் செய்து செக் கொடுத்து பேரூராட்சி நிர்வாகத்தினரே முறைகேடு செய்கின்றார்கள் எனவும், 2020–2021,2021–2022, 2022–2023 ஆண்டு நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலந்து கொண்ட நிறுவனங்களை நேரில் அழைத்தும் பைல்கள் மற்றும் பில்களை வாங்கியும் ஆராய்ந்து பொருட்களே வாங்காமல் பில் மட்டும் வாங்கும் பேரூராட்சி நிர்வாகம் மீது தக்க நடவடிக்கை எடுக்கும்படியும் பேரூராட்சிக்கு தேவையான பொருட்களுக்கு திட்ட மதிப்பீடு தயார் செய்து E-Token Digital Signer Tender Two Cover System முறையிலும், ஜி.எஸ். பதிவு பெற்ற நிறுவனங்களிடம் விலைப்புள்ளி ஒப்பந்தப்புள்ளி வாங்கியும் பணிக்கான பில்தொகை நிறுவனத்தின் பெயரில் கோடிட்ட காசோலையாக வழங்க பேரூராட்சிக்கு உத்திரவிடும்படியும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து தென்காசி மாவட்டம் ஆய்க்குடி பேரூராட்சிக்கு 2020–21, 2021–22 மற்றும் 2022–23 ஆகிய மூன்று ஆண்டுக்கான பொதுசுகாதாரம், குடிநீர் திட்டம் மற்றும் இதர பொருட்கள் சப்ளை செய்ய செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் மூலமாக நாளிதழில் பிரசுரம் மேற்கொண்டும் முந்தைய சப்ளைதாரர்களுக்கு கடிதம் வாயிலாக வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு அனுப்பி வைக்கப்படும் அதன் பேரில் சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டும் வருகிறது. அவ்வாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த

விலைப்புள்ளிகள் பேரூராட்சி மன்ற தீர்மானத்தில் அங்கீகரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி நிறுவனத்திடமிருந்து அவ்வப்போது தேவையான பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு வருகின்றது என்ற விபரம் சமர்ப்பிக்கப்படுகிறது.

இந்நிலையில் சென்னை பேரூராட்சிகளில் இணை இயக்குநர் அவர்களின் பார்வை 2ல் காணும் கடிதத்துடன் இணைத்து வரப்பெற்ற பார்வை 3இல் காணும் பொதுசுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத்துறை தமிழ்நாடு மருத்துவ பணிகள் கழக கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விலைவிகிதத்தின் அடிப்படையில் விலைப்புள்ளிகள் பெறப்பட்டு அந்த நிறுவனத்திடமிருந்து அவ்வப்போது தேவையான கிருமிநாசினி பொருட்க வாங்கி பயன்படுத்தப்பட்டு வருகிறது.

2022–2023 ஆம் ஆண்டுக்கான பொருட்கள் சப்ளைக்கு வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி பார்வை 4ல் காணும் விபரப்படி பெறப்பட்டு மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள்ற பார்வை 5 இல் காணும் இப்பே.ரூாட்சி மன்ற தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஆய்க்குடி பேரூராட்சியில் 2019–2020, 2020–2021 மற்றும் 2021–2022ஆம் ஆண்டுகளில் உயர்கோபுர விளக்குகள் ஏதும் கொள்முதல் செய்யப்படவில்லை என்ற விபரம் பணிந்து தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

ஆய்க்குடி பேரூராட்சிக்கு கொள்முதல் செய்யப்படும் பொதுசுகாதாரப் பொருட்கள் அனைத்தும் பேரூராட்சியின் திடக்கழிவு மேலாண்மை திட்டம், பொதுசுகாதாரம் டெங்கு/கொரோனா நோய்த்தடுப்பு பணிக்கு அவசிய மற்றும் அத்தியாவசிய தேவைக்கேற்ப அவ்வப்போது வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் வாங்கப்பட்டு இருப்பு பதிவேட்டில் முறையே பதிவு செய்யப்பட்டு அவ்வப்போது எடுத்து பொதுமக்களுக்கு தொற்றுநோய் தடுப்பு நடவடிக்கை பணி மேற்கொள்ளும் பொருட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதில் எவ்வித முறைகேடுகளோ நிதியிழப்போ ஏதுமில்லை என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

மேலும் மனுவில் கூறப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் முற்றிலும் உண்மைக்கு புறம்பானதாகும். இருப்பினும் பார்வை 7–இல் காணும் சந்திரா ஏஜென்சீஸ் நிறுவன கடிதத்தில் கூறப்பட்டுள்ள போன் எண், முகவரி, GSTIN NO மற்றும் கையெழுத்து இல்லாத எந்த வடிவத்தில் தபால் வந்தாலும் அதற்கு நிறுவனம் பொறுப்பல்ல என்று தெரிவித்து வரப்பெற்ற கடித ஒளிநகலினையும் இத்துடன் இணைத்து தங்களின் மேலான பார்வைக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

மேலும் மனுதாரரான சந்திரா ஏஜென்சீஸ் நிறுவனம் கடந்த 2020–21, 2021–22 மற்றும் 2022–23 ஆகிய வருடங்களில் ஆய்க்குடி பேரூராட்சியில் வருடாந்திர ஒப்பந்தப்புள்ளியில் குடிநீர் திட்ட உதிரி பொருட்கள் விநியோகம் செய்யும் ஒப்பந்தப்புள்ளிகளுக்கு மட்டும் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு கூடுதல் விலைவிகிதம் குறிப்பிட்டுள்ள தனியரது விலைப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்ற விபரம் பணிந்து சம.ப்பிக்கப்படுகிறது. மேலும் மேற்படி நிறுவனத்தின் மூலம் குடிநீர் திட்ட உதிரி பொருட்கள் தவிர இதர இனங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி ஏதும் வழங்கப்படவில்லை என்ற விபரம் பணிந்து தெரிவிக்கப்படுகிறது.

எனவே மேற்காணும் மனுதாரர் மனுவில் கூறப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் முற்றிலும் உண்மைக்கு புறம்பானதாகும் என்ற விபரத்தினை பணிந்து தெரிவித்துக்கொள்வதோடு 2020-21,

2021-22 மற்றும் 2022-2023 ஆகிய மூன்றாண்டுகளுக்கு பெறப்பட்டுள்ள வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகள் மற்றும் தீர்மான ஒளி நகல்கள் இத்துடன் இணைத்து பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

7) முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம், ஆயக்குடி பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

மனுதாரர் தமது மனுவில் ஆயக்குடி **பேரூராட்சி செயல் அலுவலர் திரு. J. மாணிக்கராஜ்** மாதா மாதம் ரூ.8950ல் இருந்து ரூ.9950க்குப் பில் மட்டும் போட்டு பொருட்கள் வாங்குவதில்லை என்றும் அத்தொகைக்கு 10 முதல் 20 சதவீதம் கமிஷன் எடுக்கப்படுவதாக தெரிவித்துள்ளார். அதே போல் தகுதியே இல்லாத நிறுவனங்களிடம் விலைப்புள்ளி பெறப்பட்டு பொருள் வாங்காமல் பில் போடப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

பேரூராட்சி இயக்குநரின் சுற்றறிக்கையின்படி ஒப்பந்தபுள்ளி நடத்தாமல் தங்களுக்கு வேண்டியவர்களுக்கு ஒப்பந்தபுள்ளி கொடுப்பதாகவும், பேரூராட்சியில் பிளிச்சிங் பவுடர், பினாயில் சுண்ணாம்பு தூள், கொசு மருந்து, தளவாட பொருள், புல் வெட்டுதல் குழி தோண்டுதல், ஜெராக்ஸ் எடுத்தல் ஜே.சி.பி. இயந்திரம் வாடகைக்கு எடுத்தல் போன்ற இனங்களுக்கு GST வரி கட்டும் நிறுவனங்களிடம் பில் வாங்குவதில்லை என்றும் GST பதிவு இல்லாத வரி கட்டாத நிறுவனங்களின் பெயரில் போலியாக பில் போடுவதாக கூறியுள்ளார்.

2019 முதல் 2022 வரை உயர்கோபுர விளக்கு அமைத்தல் எல்.இ.டி விளக்குகள் வாங்கியதில் பெரிய அளவில் முறைகேடு நடந்துள்ளது என்றும் மேலும் 2020-ஆம் ஆண்டிலிருந்து 2022-2023–ஆம் ஆண்டு வரை நடைபெற்ற ஒப்பந்தபுள்ளியில் கலந்து கொண்ட நிறுவனங்களை நேரில் அழைத்து பேசி ஆராய்ந்து பொருட்களை வாங்காமல் பில் மட்டும் வாங்குவதாக தெரிவித்து இவ்வாறு முறைகேட்டில் ஈடுபட்ட பேரூராட்சி அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க மனுதாரர் கோரியுள்ளார்.

மேலும் மனுதாரர் 13.10.2022 நாளிட்ட நேரடி விசாரணையிலும் இதே குற்றச்சாட்டுகளைத்தான் **ஆயக்குடி பேரூராட்சியின்** மீது சுமத்தியுள்ளார்.

**ஆயக்குடி இரண்டாம்நிலை பேரூராட்சிக்கு** 2020–21, 2021–22 மற்றும் 2022–23 ஆகிய மூன்று ஆண்டுக்கான பொது சுகாதாரம், குடிநீர் திட்டம் மற்றும் இதர பொருட்கள் சப்ளை செய்ய செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் மூலமாக நாளிதழில் பிரசுரம் மேற்கொண்டும் முந்தைய சப்ளைதாரர்களுக்கு கடிதம் வாயிலாக வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு அனுப்பி வைக்கப்பட்டும் அதன்பேரில் சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டும் அவ்வாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளிகள் பேரூராட்சி மன்ற தீர்மானத்தில் அங்கீகரிக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி நிறுவனத்திடமிருந்து அவ்வப்போது தேவையான பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு வருகின்றது என்பதை செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

மேலும் **ஆயக்குடி பேரூராட்சியில்** 2019–2020 ஆம் ஆண்டு பொதுநிதி திட்டத்தில் சூரிய சக்தியில் இயங்கும் உயர்கோபுர மின்விளக்கு அமைத்தல் பணி மேற்கொள்ள அரசின் விதிமுறைகளுக்குட்பட்டு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிடப்பட்டு 20.09.2019 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த செல்வராஜ் & கோ, திருச்சி

நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு சூரிய சக்தியில் இயங்கும் உயர்கோபுர மின்விளக்கு அமைக்கப்பட்டுள்ளதும் அறிக்கையின் மூலம் தெரியவருகிறது.

**ஆயக்குடி பேரூராட்சிக்கு** கொள்முதல் செய்யப்படும் பொதுசுகாதாரப்பொருட்கள் அனைத்தும் பேரூராட்சியின் திடக்கழிவு மேலாண்மை திட்டம், பொதுசுகாதாரம், டெங்கு/கொரோனா நோய்த்தடுப்பு பணிக்கு அவசிய மற்றும் அத்தியாவசிய தேவைக்கேற்ப அவ்வப்போது வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் வாங்கப்பட்டு இருப்பு பதிவேட்டில் முறையே பதிவு செய்யப்பட்டு அவ்வப்போது எடுத்து பொதுமக்களுக்கு தொற்றுநோய் தடுப்பு நடவடிக்கை பணி மேற்கொள்ளும் பொருட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பதும் அறிய முடிகிறது.

மேலும் மனுதாரரான சந்திரா ஏஜென்சீஸ் நிறுவனம் கடந்த 2016–2017 ஆம் ஆண்டு முதல் 2021–22 ஆகிய 6 வருடங்கள் **ஆயக்குடி பேரூராட்சியில்** வருடாந்திர ஒப்பந்தப்புள்ளிகளில் கலந்து கொண்டு, அதில் குறைந்த விலைப்புள்ளிதாரராக இருந்து வந்து பொது சுகாதார பொருட்கள் 6 வருட காலமாக தொடர்ந்து, **ஆயக்குடி பேரூராட்சியில்** வருடாந்திர ஒப்பந்தப்புள்ளிதாரராக இருந்து பொருட்கள் விநியோகம் செய்து வந்துள்ளார் என்பதையும் விசாரணையின் மூலம் அறிய முடிகிறது.

மனுதாரர் தனது மனுவில் **ஆயக்குடி** பேரூராட்சி செயல் அலுவலர் மாதா மாதம் ரூ.8950ல் இருந்து ரூ.9950க்குள் பில் போட்டு பொருட்கள் வாங்காமல் பில் மட்டும் வாங்கப்பட்டு அத்தொகைக்கு 10 சதவிகிதம் முதல் 20 சதவிகிதம் கமிஷன் பெறுவதாக தெரிவித்துள்ளார். இவர் புகாராக **ஆயக்குடி பேரூராட்சி** செயல் அலுவலரை மட்டும் குறிப்பிடவில்லை. **ஆலங்குளம், திருவேங்கடம், சிவகிரி, குற்றாலம் மற்றும் சிங்கம்புணரி ஆகிய பேரூராட்சிகளின் செயல் அலுவலர்கள்** மீதும் இதே குற்றச்சாட்டை சுமத்தியுள்ளார். **ஒரே தொகையை** எவ்வாறு மற்ற பேரூராட்சிகளின் செயல் அலுவலர்கள் மீதான குற்றச்சாட்டாக குறிப்பிட முடியும். இது கற்பனைக்கு எட்டாத விஷயமாக உள்ளது. மேலும் எந்த நிறுவனத்திற்கு பட்டியல் தொகை கொடுக்கப்பட்டது; என்ன பொருட்கள் வாங்க பட்டியல் தொகை கொடுக்கப்பட்டது என்ற விவரத்தை மனுதாரர் குறிப்பிடவில்லை. இக்குற்றச்சாட்டிற்கு எந்தவிதமான ஆதார ஆவணத்தையும் மனுதாரர் சமர்ப்பிக்கவில்லை.

2022–2023–ஆம் ஆண்டுக்கான பொருட்கள் சப்ளைக்கு தகுதியே இல்லாத பல நிறுவனங்களிடம் விலைப்புள்ளி பெறப்பட்டு பட்டியல் தொகை கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால் பொருட்கள் வாங்கவில்லை என்று மனுதாரர் குறிப்பிட்டுள்ளார். ஆனால் குறிப்பிட்டு எந்த ஒரு நிறுவனத்தின் பெயரையும் மனுதாரர் குறிப்பிடவில்லை, எந்த பொருளுக்கு பட்டியல் தொகை வழங்கப்பட்டுள்ளது என்ற விவரத்தையும் அவர் தெரிவிக்கவில்லை.

**ஆயக்குடி பேரூராட்சியில்,** பிளிச்சிங் பவுடர், பினாயில் போன்ற சுகாதாரப் பொருட்கள் வாங்குவதில் மற்றும் புல் வெட்டுதல், குழி தோண்டுதல், ஜெராக்ஸ் எடுத்தல், ஜே.சி.பி. இயந்திரம் வாடகைக்கு எடுத்தல், குடிநீர் குழாயில் ஏற்படும் பழுதுகள் போன்ற இனங்களுக்கு G.S.T. வரி கட்டும் நிறுவனங்களிடம் பில்வாங்கவில்லை என்றும், GST பதிவு இல்லாத வரி கட்டாத நிறுவனங்களின் பெயரில் போலியாக பில் தயார் செய்யப்பட்டதாக தெரிவித்துள்ளார். இக்குற்றசாட்டிலும் வரி கட்டும் GST நிறுவனம் எது, வரி கட்டாத போலியான GST பதிவு இல்லாத நிறுவனம் எது, எந்த போலியான நிறுவனத்தில் பில் தயார் செய்யப்பட்டது என்ற விவரத்தையும் மனுதாரர் குறிப்பிடவில்லை. இதற்கான ஆதார ஆவணங்கள் எதையும் சமர்ப்பிக்கப்படவில்லை.

**ஆயக்குடி பேரூராட்சியில்** மார்கெட் விலையைவிட அதிக விலை கொடுத்து சோலார் உயர் கோபுர விளக்குகள் (6 எண்ணப் பிட்டிங்ஸ் உள்ளது) தெரு விளக்கு LED விளக்குகள் நீம் ஆயில் போன்ற இனங்களுக்கு பேப்பர் விளம்பரம், ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் இல்லாமல் ஒரு குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு பொது நிதியில் வாங்கப்பட்டதாக மனுதாரர் தெரிவித்துள்ளார். இதிலும் ஒரு குறிப்பிட்ட நிறுவனம் என்றுதான் தெரிவித்துள்ளார். நிறுவனத்தின் பெயரை குறிப்பிடவில்லை. ஆதார ஆவணங்கள் எதையும் இந்த குற்றச்சாட்டிற்கும் சமர்ப்பிக்கப்படவில்லை.

பேரூராட்சியின் பொது நிதியில் இருந்து பொது சுகாதாரப் பொருள், தெருவிளக்கு, குடிநீர் குழாய் பொருட்கள் வாங்குவதில் தரம் வாரியாக ரூ.5 லட்சம் முதல் 10 லட்சம் வரை முறைகேடுகள் நடப்பதாக தெரிவித்துள்ளார். மேற்கண்ட புகார் குறித்து தரம் வாரியாக யார் பெயரையும் குறிப்பிடவில்லை. ஆதார ஆவணங்கள் எதையும் மனுதாரரால் சமர்ப்பிக்கப்படவில்லை.

2020 ஆம் ஆண்டு முதல் 2022-2023 ஆம் ஆண்டு நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்ட நிறுவனங்களை நேரில் அழைத்தும் பைல்கள் மற்றும் பில்களை வாங்கியும் ஆராய்ந்து பொருட்களை வாங்காமல் பட்டியல் தொகை மட்டும் வாங்கப்படுகிறது என்று தெரிவித்துள்ளார். இதிலும் எந்த நிறுவனத்திடம் பட்டியல் தொகை வாங்கப்பட்டது என்ற விவரம் இல்லை. மேற்சொன்ன குற்றசாட்டுகள் அனைத்தும் **ஆயக்குடி பேரூராட்சியில்** மட்டும் நடைபெறவில்லை. **ஆயக்குடி பேரூராட்சி** உட்பட மேற்குறிப்பிடப்பட்டுள்ள 5 பேரூராட்சிகளிலும் நடைபெறுவதாக மனுதாரர் குறிப்பிட்டுள்ளார். குற்றச்சாட்டுகள் அனைத்தையும் ஆதார ஆவணமின்றி மனுதாரர் சுமத்தியுள்ளார். இவை ஏற்க கூடியதாகவும் நம்பக்கூடியதாகவும் இல்லை.

வருடாந்திர ஒப்பந்த முறையை ரத்து செய்து பேரூராட்சிக்கு தேவையான பொருட்கள் வாங்குவதற்கு திட்ட மதிப்பீடு தயார் செய்து E Token Digital Signer Tender Two Cover System முறையை தெரிவித்துள்ளார். ஆனால் The Tamil Nadu Transparency in Tenders Act, 1998 (Tamil Nadu Act of 1998) Chapter – V 18 (3) ல் கீழ்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது,

> **[ (3) The Tender Inviting Authority shall permit the submission of tenders by post or courier or by electronic submission through the designated website, wherever applicable, provided that the Tender Inviting Authority shall not be responsible for any delay in transit in such cases.]**

மேலும் மனுதாரர் (சந்திரா ஏஜென்சி நிறுவனம்) 2016-17ஆம் ஆண்டிலிருந்து 6 – ஆண்டுகள் **ஆயக்குடி பேரூராட்சியில்** வருடாந்திர ஒப்பந்தபுள்ளிகளில் கலந்துகொண்டு குறைந்த விலைப்புள்ளிதாரராக இருந்து பொது சுகாதார பொருட்களை விநியோகம் செய்து வந்துள்ளார்.

இவருக்கு ஒப்பந்தபுள்ளியில் கலந்துகொள்ளும் முறைகள் அனைத்தும் தெரிந்திருக்க வேண்டும், தெரியவில்லை என்றால் **ஆயக்குடி பேரூராட்சியில் 6** ஆண்டுகள் எவ்வாறு குறைந்த விலை புள்ளிதாரராக இருந்திருக்க முடியும்? எனவே, மனுதாரர் வேண்டுமென்றே, பேரூராட்சியின் மீது பொய்யான குற்றசாட்டுகளை சுமத்தியுள்ளார். இதனை இம்முறைமன்ற நடுவம் வன்மையாக கண்டிக்கிறது. ஒரே மாதிரியான குற்றசாட்டுகளை அதே புள்ளி விபரங்களோடு 6 பேரூராட்சி நிர்வாகத்தின் மீது சுமத்தியுள்ளார். இச்செயல் கண்டனத்திற்குரியது; மேலும் தமது குற்றசாட்டுகள் ஒன்றிற்கு கூட மனுதாரரால் ஆதார ஆவணத்தை சமர்ப்பிக்கப்படவில்லை என்பதால் இவரால் 6 பேரூராட்சி நிறுவனங்களின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அனைத்தும் ஆதார ஆவணங்களற்ற குற்றச்சாட்டுகள் என்று இம்முறைமன்றம் முடிவு செய்து பேரூராட்சி செயல்

அலுவலரின் அறிக்கையினை ஏற்று இம்மனு மீதான மேல் நடவடிக்கையை இத்துடன் முடித்துவைக்க முடிவு செய்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. இங்ஙனம் ஆதாரமற்றக் குற்றச்சாட்டுக்களை 6 பேரூராட்சிகள் மீதும் சுமத்தியது மனுதாரருக்கு அழகல்ல என இம்முறைமன்றம் கருதுகிறது.

எனினும் **ஆயக்குடி பேரூராட்சியில்** கொள்முதல் செய்யப்படும் பொது சுகாதாரப் பொருட்கள் அனைத்தும் வருடாந்திர ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு GST வரி கட்டி அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் வாங்கப்பட்டு இருப்பு பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு முறையாக பயன்படுத்தப்பட்டு வருகிறதா என்பதை உள்ளாட்சி நிதி தணிக்கை துறையால் உரிய ஆய்வு செய்து முறைகேடுகள் நடைபெற்றிருப்பின் உரிய நடவடிக்கை மேற்கொள்ள உள்ளாட்சி நிதி தணிக்கை துறை இயக்குனருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

**2022**-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் **2**-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. S. செல்வகுமார்,
நெ.**96**, வடக்கு ஒப்பனை தெரு,
சந்திரா ஏஜென்ஸிஸ்
தென்காசி **627 811**
2. செயல் அலுவலர்,
ஆயக்குடி பேரூராட்சி,
தென்காசி மாவட்டம்.
3. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
தென்காசி மாவட்டம்.
4. பேரூராட்சிகளின் ஆணையாளர்,
பேரூராட்சிகளின் ஆணையரகம்,
நகர்நிர்வாக அலுவலகம், ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி. நகர், சென்னை–28.
5. இணை இயக்குநர்(பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம்,
நகர் நிர்வாக அலுவலகம்,
ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி. நகர்,
சென்னை–**28**. (பெயரிடப்பட்ட உறையில்)

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்.
இ.கோ/உதிரி

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்.